செ.வெ.எண்: 26 – 2020 நாள்:18.07.2020

**விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (18.07.2020) விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சித்தேரிக்கரை, ஆடல் நகர், மஞ்சு நகர் மற்றும் வழுதரெட்டி காலணி ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது வழுதரெட்டி காலணியில் கட்டிட கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் முகக்கவசம் அணியாமல் பணியில் ஈடுபட்டிருப்பதை பார்த்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் பணியாளர்களிடம் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் எனவும். மேலும் கட்டிட உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்ளுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து நோய் தொற்று பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் ஒலிப்பெருக்கி வாகனத்தின் வாயிலாக கொரோனா வைரஸ் நோய் தொற்றிற்க்கான அறிகுறிகள், நோய் தடுப்பு முறைகள், உணவுப்பழக்க வழக்கங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும் வீடு, வீடாக சென்று துண்டு பிரசுரங்கள் வாயிலாகவும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அரசு அறிவுறுத்திய விழிப்புணர்வினை கடைபிடிப்பதன் மூலம் நமது விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையினை பொதுமக்களிடையே ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப.. அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்**